உ

சிவமயம்



உடுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

அவர்களின் அமரத்துவ

# நினைவு மலர்

2000.07.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கரணவாய் கிழக்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும்
உடுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

அவர்களின்

அமரத்துவ

# நினைவு மலர்

16.07.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வம் ஆக
உயர்ந்துவிட்ட எங்கள் அன்புத்தெய்வமே
வாழ்வாங்கு வாழ வழிசமைத்த கோமகனே
கல்வி அறிவு ஒழுக்கம் கடமை உணர்வூட்டி
அன்பு நெஞ்சங்களில் அகலா இடம்பெற்ற நல்லோனே
மானம் பெரிது எனும் மந்திரத்தை உச்சரித்த
தங்கள் பாத கமலங்களில்
இம்மலரைச் சூட்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரத்திரட்டு

## விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

## திருவாசகம்

அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப் பின்னும் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரிஉரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உசந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திரு. ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்



தோற்றம்:
**8-9-1943**

மறைவு!
**16-6-2000**

## திதி வெண்பா

விக்கிரம வாண்டு விளங்காணி யீராம்நாள்
மிக்கதாம் பூரணையும் மேவவே — தக்கவராம்
சிற்சபே சன்னுடுவை சீர்மனைமக் கள்புலம்பப்
பொற்சபையான் தாளடைந்தான் போய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன் அவர்களின்
## வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் மணிமுடி எனத்திகழும் யாழ்ப்பாணத்தில் அறிஞர்களும், கலைஞர்களும் நிறைந்து வாழும் பகுதி வடமராட்சி. இப்பகுதியில் கரணவாய் கிழக்கு கரவெட்டி என்பது ஓர் சிற்றூர். இவ்வூரில் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த சிற்றம்பலம் ஆழ்வாப்பிள்ளைக்கும் வேலுப்பிள்ளை பார்வதிக்கும் நான்காவது புதல்வராக அவதரித்தவரே எங்கள் அமரர் சிற்சபேசன் ஆவார். அமரர் அவர்களின் சகோதரர்கள் சிவதாசன், சிற்றம்பலம், டாக்டர் சிவசிதம்பரம், சரஸ்வதிதேவி ஆகிய நால்வரும் அமரர்களாயினர். சறோஜினிதேவி அவர்கள் இறைபக்தியோடு வாழ்ந்து வருகிறார்கள்.

பெற்றோர் செய்த பெருந்தவப் பேறாக 1943ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் எட்டாம் திகதி அமரர் அவர்கள் அவதரித்தார்கள். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்னும் முதுமொழிக் கிணங்க இவர்கள் பல்துறையிலும் வல்லவரானார். இவர்கள் தம் ஆரம்பக் கல்வியை கரவெட்டி வேதாரணியம் வித்தியாலயத்திலும், உயர்கல்வியை கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரியிலும் பயின்றார். இக்காலையில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கிப் பல பரிசில்களைப் பெற்று அதிபர், ஆசிரியர் களதும் அறிஞர்களதும் பாராட்டுக்களையும் பெற்றார். பின்னர் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் தேர்ச்சிபெற்று 1961ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து மேலும் உயர் கல்வி கற்று கலைப்பட்டதாரி (B.A.) ஆனார். நல்லவரும் வல்லரு மாகிய இவர்கள் பட்டப்படிப்போடு வங்கி எழுதுவினைஞர் பரீட்சை யில் சித்தியெய்தி 1968இல் கல்முனை மக்கள் வங்கியில் அரச சேவையில் அமர்ந்தார்.

திருவருள் துணைகாட்ட 1974ஆம் ஆண்டு உடுவிலைச் சேர்ந்த உயர்வேளாண் மரபில் உதித்த மயில்வாகனம் தம்பதி களின் இரண்டாவது புதல்வி நவேந்திரராணி அவர்களைத் திருமணம் செய்து இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடாத்தி வந்தனர். இவர்கள் இருவரும் கல்வி கேள்விகளிலும் இறை பக்தியிலும் சிறந்து விளங்கினர். இன்சொல்லும் இனிய முகமும் அவர்தம் பெருமையை எடுத்துக் காட்டுவனவாகும்.

இவர்கள் செய்த நல்லறத்தின் பயனாக 1975ஆம் ஆண்டு மாசித் திங்கள் பதினாறாம் நாள் குலம் விளங்க வைக்க குமரன் ஒருவன் பிறந்தான். பெற்றோர் இவனுக்குச் செந்தூரன் எனப்பெயரிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமாக வளர்த்தனர். இந்நிகழ்வைத் தொடர்ந்து 1978ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் பத்தாம்நாள் உதித்தவனே ஐங்கரன் ஆவான். புத்திரர் இருவரையும் தம் கண்ணெனப்போற்றி வளர்த் தனர் பெற்றோர். மைந்தர் இருவரும் உடுவில் மகளிர் கல்லூரியில் தம் ஆரம்பக் கல்வியைக் கற்றனர். செந்தூரன் இடைநிலைக் கல்வியை யா/இந்துக்கல்லூரியில் கற்று, உயர்கல்வியை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் பயின்று பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வில் தேர்ச்சியும் பெற்றார். இவர் வைத்திய கலாநிதியாக வேண்டும் என்னும் அவா மேலீட்டினால் பாகிஸ்தான் பல்கலைக்கழ கத்தில் கல்வி பயில்கிறார். ஐங்கரன் உயர்கல்வியை யாழ். இந்துக்கல்லூரியில் கற்று பல்கலைக்கழக புகுமுக தேர்வில் தேர்ச்சி பெற்று இன்று மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியலாள ராகக் கல்வி பயில்கிறார். அமரர் அவர்கள் மங்கலமாம் மனைவியும் நன்கலமாம் மக்கட்பேறும் வாய்க்கப்பெற்ற பெருமைக்குரியவராவார்.

**"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த**
**மக்கட் பேறு அல்ல பிற"**

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்"**

என்னும் வள்ளுவன் வாய்மொழியை மெய்ப்பித்த பெருமை அமரர் அவர்களுக்கு வாய்க்கப்பெற்றது. அமரர் அவர்கள் கல்முனை, கன்னாதிட்டி, சங்கானை, பருத்தித்துறை, யா/ நவீன சந்தை ஆதியாம் மக்கள் வங்கிகளில் கடமையாற்றி உயர்ச்சியும் பெற்றார். ஈற்றில் யாழ் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் முகாமை யாளராக பதவி உயர்வுபெற்று செய்யுந்தொழிலே தெய்வம் என்பதை மெய்ப்பித்து சேவைகள் செய்தார். இவர் தம் சேவையைப் பல்லோரும் வாயாரப் புகழ்ந்தனர். ஈற்றில் 1998ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ந் திகதி அதாவது தமது 55ஆம் வயது பூர்த்தியில் தம் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இடையிடையே நோய்வாய்ப்பட்ட இவர் இறுதியில் இவ்வாண்டு ஆனி மாதம் பதினாறாந்திகதி வெள்ளிக்கிழமை இரவு 12மணியள வில் இறைபதம் அடைந்தார். இவர்கள் சமய சமூக சேவையில் ஈடுபட்டு உழைத்த பெருமகனாவார். அமரர் அவர்கள் நோயுற்ற பொழுதெல்லாம் பத்தியம் காத்த பத்தினியாம் அவர் தம் அருமை மனைவியும் மங்கலம் என்னும் மனைமாட்சிக்கு அருகதை உடைய வர் ஆவார். இவர்கள் அமரருக்கு வாய்க்கப் பெற்றதும் அவர் செய்த தவப்பேறே ஆகும். மேலும் இராசரத்தினம் இராஜ்குமார் - பபி அண்ணா அவர்கள் அணுக்கத்தொண்டராய் அருகிருந்து ஆறுதல் கூறி ஆவண எல்லாம் செய்த அன்பர் அவர்களை என்றும் மறவாதிருப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

ஐயா என்பிரிய நாயகரே!
நான் செய்த புண்ணியத்தால் கரம்பிடித்த
நாள் முதலாய் மாதரசி ஆனேன்
என் கண்கண்ட தெய்வமே
கண்ணை இமை காப்பதுபோல் என்னைக் காத்திட்டீர்
கவலை சிறிதுமின்றி வாழ்க்கை நடத்தி வந்து
பிள்ளைகளைப் பெற்று பிரியமுடன் ஆதரித்து
வளர்பிறை போல் வளர்த்திட்டீர்
குலம் சிறக்க வந்தார்கள் செந்தூரன், ஐங்கரனும்
வைத்திய கலாநிதியாய் வரஇருக்கும் செந்தூரன்
பொறியியலாளரும் பேறுபெற்ற ஐங்கரனும்
துயரச் செய்திகேட்டு புழுவாய்த் துடிக்கின்றார்.
ஆறாய்க் கண்ணீர் வடிக்கின்றார்
கண் முன்னே நிற்கும் கடவுள் ஆனவரே
கண்ணுறக்க மின்றிக் கவலையே உருவானேன்.
ஊணை மறந்தேன் உறக்கமின்றித் துடிக்கின்றேன்.
கண்ணீரால் கவலை குறையவில்லை
காலம் முழுதும் அழுதாலும் என் கவலை தீராதையா
செல்வச் சீமானே என்னைத் தனியவிட்டு
எங்குற்றீர் எங்குற்றீர்
காலனவன் குறுக்கே வந்திட்டான்
இல்லை, அவன் தன் கடமை செய்திட்டான்
இடைநடுவில் என்னைத் தவிக்கவிட்டு எங்குற்றீர்
தனியே இருந்து ஏதும் பழக்கமில்லை.
எல்லா வழியாலும் ஏதும் குறைச்சலின்றி
செல்லப் பிள்ளையாய் சிறப்புடனே வாழ வைத்தீர்
கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல் என்ற
புலவனின் பாடலைத்தான் புரட்டிப் பார்க்கின்றேன்
என் ஆசைதீர இனியவார்த்தை கேட்பதெப்போ?
என்ன கூறி அழுதாலும் மாண்டார் வாரார்
வார்த்தை ஒன்றும் பேசார் என்பதனை உட்கொண்டு
தங்கள் கண்மணிகள் இருவரையும்
கலங்காது பார்த்துக் கொண்டு
தக்கவாறு கற்பித்து தக்கவர் ஆக்கிடுவேன்.
என் பிரான நாயகரே நீர் விட்டுச் சென்ற
பணி முடிக்க விளைகின்றேன்.
சத்தியமாய் சந்திப்போம் மறுபிறப்பில்
கண்ணீர் கலங்க தங்கள் பாதார விந்தங்களை
பன்முறையும் வணங்கி விடையும் பெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"**

என்னும் வள்ளுவன் வாய்மொழியை மெய்ப்பித்த கோமகனே
நும்கடன் முடித்துச் சிட்டாய்ப் பறந்திட்டீர்
மீளாய்துயில் கொண்டனையே
நாமும் நம்கடன் செய்து நும்மை மகிழ வைப்போம்
ஐந்து வயது ஆகுமட்டும் ஆதரவாய்ப் பேணி
நோய் நொடி இன்றி வாழ வைத்து
அம்புலி காட்டி அமுதினை ஊட்டி, அறிவொளி தந்து
இறைவனாற் தன்மை பெற்றீர்.
இனிய கதைகள் பல பேசி இன்பமாய் வாழ வைத்தீர்
ஈரைந்து வயதுதன் பின் எம்மைக் கண்டித்தீர், அத்தோடு
நாளும் நல்லறிவு புகழுரைகள் கூறி வைத்தீர்
ஈரெட்டு வயதுதன் பின் மித்திரன் போல் பேணி
கல்வியின் ஆழத்தை, கதைகள் பல பேசி
கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
என்ற வாசகத்தை நாமுணர வைத்தீர் ஐயா,
அவனின்றி ஓர் அணுவும் அசையாது
அவன் அருளாலே அவன்தாள் வணங்கு என்னும்
மணிவாசகத்தை ஆழமாய்ப் பதிய வைத்தீர்
மின்னாது, முழங்காது பெருமழை பெய்தது போல்
பேசாது பறையாது மீளாத்துயில் கொண்டனையே
எம் அப்பா, ஏன் அப்பா மௌனமாகி இருக்கின்றீர்
என்ற பொழுதில் பெரிதுவந்தீர்
ஆரம்பக் கல்வியில் ஆர்வங்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியே கருந்தனம் என்பதை உணர வைத்தீர்
நாமும் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
என்பதை நன்குணர்ந்து நாளும் படிக்கலானோம்.
பிள்ளைகள் இருவரும் உயர்நிலை எய்த வேண்டும்
என்னும் அன்னையின் ஆசையை பூர்த்தி செய்தீர்
எம் கடன் முடித்து மறு உலகிலாவது
தங்களை மேலும் மகிழ வைப்போம்.
இளவயது தொட்டு, வயது வந்தும்
கைப்பிள்ளைகளாகி வளர்ந்து வந்தோம்.
இன்று தந்தையை இழந்த தனயர் ஆனோம்.
விதியை வெல்ல யார் தாம் வல்லார்
எம் அம்மா இருக்கின்றார் பக்கத்தில்
எம்மை அவள் உயிரினும் மேலாகப் பார்த்துக்கொள்வார்
அழுது புரண்டு ஆவது ஒன்றில்லை அப்பா
ஆகையால் உங்கள் ஆசையைப் பூர்த்திசெய்வோம்
பூர்த்தி செய்வோம் என்று உறுதி கூறி
தங்கள் பாத கமலங்களை வணங்கிக் கொண்டு
நீங்கள் இறையடியில் நிம்மதியாய் வாழ
குலதெய்வம் ஐங்கரனை, ஐங்கரனும் செந்தூரனும்
பலகாலும் வேண்டி விடைபெற்றுக் கொள்ளுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி மீளாது!

எம் ஊரில் கல்வியும் ஒழுக்கமும் கைவரப் பெற்ற குடும்பம் ஒன்று உண்டு. அக்குடும்பத்தில் ஆழ்வாப்பிள்ளை உபாத்தியாயரும் பார்பதி அக்காவும் செய்த செயற்கரிய செயலின் பயனாக நாலு ஆண்மகவும் இரண்டு பெண்மகவும் உதித்தனர். ஆண்மக்களுள் சிற்சபேசன் என்பவர் எமது அயலவன் மட்டுமன்றி ஒரு சாலை மாணாக்கனுமாவான்.

படிக்கும் காலத்திலேயே சிறந்த நுண்ணறிவும் ஆளுமையும் உடையவராகவும் திகழ்ந்தார். எல்லா நலமும் வாய்க்கப்பெற்ற சிற்சபேசன் அவர்களிடத்தில் சைவப்பண்புகள் மேலோங்கி இருந்தன. தந்தைவழி மைந்தனாகவும் திகழ்ந்தார். தந்தையார் ஆழ்வாப்பிள்ளை உபாத்தியாயர் போலக் கவிபுனையும் ஆற்றலும் உடையவராக விளங்கினார்.

கலைமானிப் பட்டம்பெற்ற சிற்சபேசனிடத்தில் கணிதத்திறமை அபாரமாக இருந்த காரணத்தால் வங்கி முகாமைத்துவம் அவர் கைவசமாயிற்று.

அளவாக நுட்பமாகப் பேசும் தன்மை இன்றும் எம் கண்முன் நிற்கிறது. இல்லற வாழ்க்கையினை மேற்கொண்டு தம் வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டதால் எம்மூர்த்தொடர்பு குறைந்து போயிற்று. நோய்வாய்ப்பட்ட காலத்திலும் அவரைக்கண்டு உரையாடும் வாய்ப்பை விதி அளிக்கவில்லை. விதி தன் கருமத்தில் கண்ணாக இருந்துள்ளது. அவரின் குரல் இனி ஒலிக்கப் போவதில்லை. இறந்த செய்தி கேட்டு எம் இளமைக்காலத்தை நினைத்துப் பார்க்கின்றேன். அக்காட்சிகள் இனி மீளாது. மீளாத் துயிலில் ஆளாகிய சிற்சபேசனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதே எமது நன்றிக்கடப்பாடு. அன்னாரின் மனைவி, மக்கள், சகோதரர்களுக்கு ஆறுதல் கூறி அமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பண்டிதர் கை. நமசிவாயக்குருக்கள்**

கரணவாய் கிழக்கு.
25.06.2000

கரணவாய்,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நண்பன் சிற்சபேசன்

நண்பன் சிற்சபேசன் அவர்களுடன் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக பழகி வந்துள்ளேன். பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களாக எமது அறிமுகம் ஆரம்பித்தது. பின்பு பல ஆண்டு களாக அவர் மக்கள் வங்கிச் சேவையில் இருந்தபோது ஆரம்பத் தில் நான் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்தேன். கொழும்பிலும் போக்குவரவு சமயங்களிலும் நாம் சந்தித்தோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நான் வந்த பின் அவருடைய சேவை கிழக்கு இலங்கையில் நடந்துகொண்டிருந்தது. 1990களில் யாழ்ப்பாணச் சந்தை வங்கியிலும் பின்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாக மக்கள் வங்கி நிறுவப்பட்ட பின் அங்கும் இன்னும் நெருங்கிப் பழகினோம் இச்சமயத்தில் அவருக்கு நோய் ஏற்பட்டு விட்டது. இது தமிழினம் படும் அவலத்தின் எதிரொலியாக அமைந்தது என்பது எனது கருத்து.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் முகாமை யாளராகக் கடமையாற்றும்போது பல்கலைக்கழக சமூகத்துடன் நெருங்கிப் பழகினார். ஏனெனில் அங்குள்ளவர்கள் ஏற்கனவே அவருக்குப் பரிச்சயமானவர்கள். இங்கு இருக்கும்போது பல பேருக்குப் பல வழிகளில் உதவி செய்தார். எனது வங்கிக்கணக்கு திறக்கப்படும்போது இலக்கம் 'ஒன்று' வரக்கூடியதாக ஒதுக்குமாறு கூறினேன். 13ம் இலக்கம் கடைசியில் வந்த கணக்கிலக்கம் ஒன்றைத் தந்தார். நான் என்னடாப்பா! 13ம் நம்பர் Unlucky அல்லவா என்றேன். அவர் கூட்டுத்தொகை ஒன்றுதானே பின்னுக்கு நல்ல இலக்கமாக இருக்கும் என்றார். அது உண்மையாகி விட்டது. அது மட்டுமல்ல ஒரு சமயம் ஒரு பெருந்தொகை கடன் தேவைப்பட்டது. கடன் விண்ணப்பம் கொடுத்த மறுநாள் பணம் கைக்கு வந்தது. அப்படியான திறமையான நிர்வாகி. விரும்பக்கூடிய பண்பு உடையவர். அதுமட்டுமல்ல சாவகச்சேரியில் இடம்பெயர்ந்து இருக்கும்போது அவர் மிகத் திறமையாகச் சேவையாற்றியதை நமது சமூகம் ஒருபோதும் மறக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சந்திக்கும் போது எமது குடும்பத்தைப் பற்றி விசாரிப்பார். நானும் விசாரிப்பேன். வங்கி பூட்டிப் போகும்போது கதைத்துக் கொண்டே புறப்படுவோம். அப்படியான ஈடுபாடு. ஆனால் அவர் அமரத்துவம் அடைய முன், அந்த டச்சு வீதியால் பலமுறை சென்றும் அவரைச் சந்திக்காமல் விட்டது ஒரு பெரும் பாதிப்பை என்னுள் ஏற்படுத்திவிட்டது. பாலா என்னுடைய தொலைபேசி இலக்கத்திற்கு அடிக்கடி தொடர்புகொள் என்று கூடக்கூறினார். எல்லாம் முடிந்து விட்டது.

நமது பகுதியில் ஏற்ற மருத்துவ வசதிகள் இல்லாதது அவர் இறப்பிற்கு முக்கிய காரணம். போக்குவரவு இல்லை. சத்தான உணவு இல்லை. நிம்மதி இல்லை. சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ முடியாது. எமது பிரச்சினையைக் காட்டி வெளிநாடு போனவர்கள் நிம்மதியாகப் பிறநாட்டில் வாழ்கின்றார்கள். நாம் மரணித்துக் கொண்டிருக்கின்றோம்.

நண்பர் சிற்சபேசன் இழப்பு எம்மிலும் பார்க்க அவரது துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் அவர்களுக்கு அடுத்ததாக அவரது உறவினர்களுக்கும் பேரிழப்பு. இந்த இழப்பை அவர்கள் தாங்கிக்கொள்ள நண்பனின் ஆத்மா ஆசீர்வதிக்கட்டும். ஆண்டவன் அவருக்கு ஆத்மா சாந்தியைக் கொடுக்கட்டும்.

ஓம் சாந்தி

நண்பன்
**பேராசிரியர். செ. பாலச்சந்திரன்**
பீடாதிபதி
கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த சேவையாளர்

மக்கள் வங்கியின் சிறந்த முகாமையாளரும் சேவையாளருமாகிய அமரர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன் அவர்கள் இன்று எம்மிடையே இல்லையென்பதை நம்ப முடியவில்லைத்தான். அவரைப்பற்றி நினைத்துப் பார்க்கிறேன்.

1971ஆம் ஆண்டு அன்னார் கல்முனையில் கடமையாற்றும்போது அவரை முதன் முதலாகச் சந்தித்தேனாயினும் அவருக்கும் எனக்கு மிடையிலான நெருங்கிய தொடர்பு அவர் மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக்கிளை முகாமையாளரான பிற்பாடே ஏற்பட்டது.

எல்லோரிடமுமில்லாத சில சிறந்த குணாம்சங்களை அவர் தன்னிடத்தே கொண்டிருந்தார். எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றவரின் மனம் புண்படும்படி அவர் பேசுவது கிடையாது. தன் கஷ்ட நஷ்டங் களை வெளிக்காட்டாது எவ்வித இடர்களின் நடுவிலும் மற்றவர்களை இன்முகத்துடன் உபசரிப்பார். இவ்வினிய பண்புகள் அவரை வாடிக்கை யாளர் மத்தியில் ஒரு சிறந்த முகாமையாளராக உயர்த்தி வைத்தது மட்டுமன்றி உயர் அதிகாரிகளிடமும் சக ஊழியர்களிடமும் ஓர் நன்மதிப்பையும் அன்பையும் அன்னாருக்குப் பெற்றுக்கொடுத்ததெனலாம்.

தன்னுடன் பணியாற்றிய ஊழியர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாக மூட்டி அன்புடன் நடத்தி, சிநேகபூர்வமான புதிய முகாமைத்துவத்தின் மூலம் வங்கிக்கும் வங்கியின் உயர் அதிகாரிகளுக்கும் சிறந்த உற்பத்தித்திறனைப் பெற்றுக்கொடுத்துப் புகழீட்டினார். உண்மையில் அவர் உயர் அதிகாரிகளின் ஓர் இனிய நண்பராகவே விளங்கினார்.

வங்கியிலிருந்து ஓய்வுபெற்றபின் தான் வாழ்ந்த சமூகத்திற்குப் பெரும்பணியாற்றி சிறந்த சமூக சேவையாளராகத் திகழ்ந்தார். இதனால் அவரது திடீர் மறைவு எமது சமூகத்திற்கே பேரிழப்பாகும்.

அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவின ருக்கும் எமது வங்கியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப் பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனை அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள் வங்கி,<br>
யாழ். பிராந்தியத் தலைமையகமும்<br>
- வடவலய அலுவலகமும்,<br>
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

கு. சிவபாதம்<br>
பிராந்திய முகாமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப்
**பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்** அவர்கள் அளித்த

# *அனுதாபச் செய்தி*

நண்பர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசனின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தேன். அவர் நம்மைவிட வயதில் இளையவர். நாம் இருவரும் முதல் முதலில் சந்தித்த இடம் பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகும். சமகாலத்தில் கல்வி கற்ற நமக்கு ஒரே விடுதியில் தங்கும் வாய்ப்பும் கிடைத்திருந்தது. மிகவும் எளிமையானவர். பழகுவதற்கு இனியவர். விசுவாசமாகப் பழகுதற்குரிய நண்பர்களின் வரிசையில் முன் நிற்பவர். எச்சந்தர்ப்பத்திலும் தம்மை விலைபேச மாட்டார்.

மக்கள் வங்கி முகாமையாளராக யாழ் மத்திய சந்தையிலும், பின்னர் எமது பல்கலைக்கழகத்திலும் அவரைக் காணும் வாய்ப்பு நமக்கிருந்தது. பல்கலைக்கழகத்தில் ஒன்றாகக் கற்றோர் எங்கிருந்தாலும், பிரிந்து கூடும்போது ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்து அகமகிழ்வது பேரின்பம். வங்கித்துறையில் அவர் பெற்ற முன்னேற்றத்தைக் கண்டு பேருவகை எய்தியவன் நான். வேண்டிய நேரமெல்லாம் அவரை அணுகும்போது மனஞ் சுழிக்காது நமக்கு மட்டுமன்றி தம்மை நாடி வரும் எவருக்கும் அந்தஸ்துப் பாராது தமது சேவையை நல்கிய பெருந்தகை. வாழ்க்கை என்பது வசதியாகப் பணஞ் சம்பாதித்து வாழ்வது மட்டுமல்ல. அளவோடு வாழ்ந்து வளமாக வாழவேண்டும் என்பதே அவரது குறிக்கோளாக இருந்ததை அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு விளங்கும்.

சிற்சபேசன் மறைந்தாலும் அவரின் சேவையை இன்றும் அவரோடு பழகியவர்கள் பாராட்டுவதொன்றே அவரின் பிரதி உபகாரமற்ற பணிகளுக்குச் சிறந்த உரைகல்லாகும். தந்தை மகற் காற்றும் உதவி அவையத்தில் முந்தி இருக்கச் செய்தல் என்ற வாய்மொழிக்கிணங்க, தமது இரு புதல்வர்களுக்கு நல்வழி காட்டியவர். சிறந்த ஒரு குடும்பத் தலைவன் என்று பலரும் மெச்சும்வண்ணம் வாழ்வாங்கு வாழ்ந்து நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். பரமனின் அடிகளைச் சேர்ந்த சிற்சபேசன் நல்ல ஒரு ஆத்மா. இது சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக.

அராலி தெற்கு,
அராலி.
28.06.2000.

**சி. க. சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எங்கள் இதயங்களில் இருப்பவர்

அன்பும், பண்பும் நிறைந்த அமரர் சிற்சபேசன் ஐயா அவர்கள் மக்கள் வங்கியிலே 25 வருடங்களுக்கு மேலாக சேவை புரிந்தவர். அவர் மக்கள் வங்கி, யாழ். நவீன சந்தைக்கிளையிலே உதவி முகாமையாளராக பணிபுரிந்து பின்னர் அதே கிளையிலே முகாமையாளராக பதவி உயர்வு பெற்று பல ஆண்டுகள் பணிபுரிந்தவர். நவீன சந்தைக்கிளை எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பல இன்னல்களை சந்தித்தது. அதன் காரணமாக அதில் தொடர்ந்து இயங்க முடியாத சூழ்நிலையிலே இக்கிளையை எங்கே தொடர்ந்து நடாத்தலாம் என்று ஐயா அவர்கள் சிந்தித்தபொழுது, யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளே திறப்பதற்கு அங்கேயுள்ள பல்கலைக்கழக நிர்வாகத்தின ருடன் பலமுறை பேச்சுவார்த்தை நடாத்தி தனித்து நின்று செயல் பட்டவர் என்பதை யாராலும் மறக்கமுடியாது. அதன்படி பல்கலைக் கழக நிர்வாகம் இந்த கிளையைத் திறப்பதற்கு எமக்கு ஓர் ஒதுக்குப்புறமான கட்டிடத்தைத் தந்தார்கள். அந்தக் கட்டடத்தைப் பார்க்கும்போது வங்கியை நடாத்துவதற்கு ஏற்றதாக இருக்க வில்லை. எமது ஊழியர்கள் இதற்குள் இருந்து நாம் எவ்வாறு கடமைகளைச் செய்வது என்றும், வங்கிகள் வாடிக்கையாளரை கவரக்கூடியதாக இருக்கவேண்டுமே என்றும் ஐயாவிடம் கூறினார் கள். ஐயா அவர்கள் நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள் நான் எல்லாம் இதனை அழகுற வடிவமைத்துத் தருகிறேன் என்று கூறினார்.

"வீதி ஓரத்திலே ஓர் பாரிய கருங்கல் ஒன்று இருப்பதைப் பார்த்து வீதியால் செல்பவர்கள் எல்லோரும் அது கல் என்று பேசாமல் போகும் போது, அதனைக் கண்ட சிலை வடிக்கும் சிற்பி ஒருவர் அதனை எடுத்து, தன்மனதில் பிடித்த சிற்பத்தை உருவாக்கியபொழுது அது கல்லாக இல்லாது அதன் அழகை இரசிப்பதற்கு, பல்லாயிரக் கணக்கான மக்கள் திரளும் அலை மோதிக் கொண்டிருந்தனர்." அதனைப்போல மிகவும் அழகான முறையிலே இக்கிளையை வடிவமைத்தார். இப்போது தினமும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், வர்த்தகப்பெருமக்கள், சிறு வாடிக்கையாளர்கள் என்று பல்லாயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தினமும் வந்து தமது கொடுக்கல் வாங்கல்களைச் செய் கிறார்கள் என்றால் இது சிற்சபேசன் ஐயா அவர்களின் அயராத உழைப்பும், சலியாத மனமும் என்றால் மிகையாகாது. ஐயா அவர்கள் 55 வயதிலே ஓய்வுபெற்றாலும்கூட அவரின் சிந்தனை கள், செயற்பாடுகள் எல்லாம் வங்கியே. இந்த சிந்தனை எல்லோரி டத்திலும் இருப்பது மிகமிக அரிது.

அன்னார் எம்மை விட்டுப் பிரிந்தாலும் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கி இருக்கும்வரை அவருடைய நாமம் என்றும் பேசப்படும். என்றும் அவர் எங்கள் இதயங்களில் இருப்பவர் என்று கூறி, 'சா வருவது திண்ணம் வாழ்வது மாயம்'. ஆனால் நீர் செய்த சேவைகள் நின் சிறப்பினைச் சொல்லும்.

அன்னாருடைய மறைவினால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரமேஸ்வரப்பெருமானைப் பிரார்த்திப்போமாக!

**க. சிறீகந்தநாயகம்**
தலைவர்,
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழகக்கிளை.

2000.06.29.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க நீ என் மனதில் என்றும்

உற்ற நண்பன் சிற்சபேசன்
பற்றெல்லாம் நீங்கித் தில்லைச்
சிற்றம்பலம் சேர்ந்தார் பேறு.

அற்றார்க் குதவுவதில் ஆலயத்திருப்பணியில்
முற்றாகப் பங்கேற்கும் நான் கண்டமுழு மனிதர்கள்
குற்றமேது மில்லா உம்வாழ்வு நினைவுகள்
நிற்காது எப்போதும் நிழல் போலக் கூடவரும்.

புத்திரர் இருவருமே கல்வியில் உயர்ந்துவர
நித்திரையாய் நீர் மீளாது போன சேதி நெருப்பாய்க்
- கனவடிக்க
பத்திரமாய்க் காத்துவந்த பத்தினி பருதவிக்க
எத்திக்கில் உறைந்தீர் எமனுக்கு இரக்கமில்லை

மண்ணில் நல்ல வண்ணம் வாழும் மனிதரெல்லாம்
விண்ணை அடைவது விலகாத மரபெனினும் - உம்
கண்ணில் ஒளிமழுங்க காலனிடம் சேர்ந்திடினும்
நண்பா உம்நினைவு என்மனதில் கோயிலடா.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

நண்பன்
டாக்டர். ம. மகேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரொளி மறைந்தது !

பல்கலைக்கழக மக்கள் வங்கியின் முன்னாள் முகாமையாளர் அமரர் ஆ. சிற்சபேசன் அவர்களுடைய திடீர் மறைவு எல்லோருக்கும் பேரதிர்ச்சியை அளித்தது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு" என்பது வள்ளுவர் வாக்கு. நீர்க்குமிழி வாழ்க்கையில் நேற்றிருந்தவர் இன்றிருப்பதில்லை என எவ்வளவு ஆறுதல் வார்த்தைகளைக் கூறினாலும் அவருடைய இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும்.

வந்தாரை இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் இந்த இல்லம் நல்ல குடும்பத்தலைவரை இழந்துவிட்டது. நல்லதொரு சிந்தனையாளனை, ஒரு சமூகத் தொண்டனை உடுவிற் கிராமம் பறிகொடுத்து விட்டது. உடுவில் சனசமூக நிலையத் தலைவராக இருந்து இவர் ஆற்றிய சேவை அளப்பரியது. வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் மற்றவர்க்கு உதவி செய்தவர் இந்த மகோன்னத மனிதர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பது வள்ளுவர் நீதி. ஒரு மகன் வைத்திய கலாநிதியாகவும் ஒரு மகன் பொறியியலாளராகவும் அமைய, இங்கும் வெளிப்படுகின்றது அவரது வாழ்க்கைச் சிறப்பு.

நல்ல மனைவி நல்ல பிள்ளை நல்ல குடும்பம் தெய்வீகம் என்பர் பெரியோர். அந்த வகையில் குடும்பப்பாங்கும், தெய்வபக்தியும் கொண்ட ஒரு மனைவியை தனது வாழ்க்கைத் துணைவியாக இவர் அடைந்தார். இரண்டு நல்ல பிள்ளைச் செல்வங்களை உத்தம புத்திரர்களாகப் பெற்றார். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கு ஏற்ப இவரது குடும்ப வாழ்வு சிறப்பாக அமைந்தது.

இவரிடம் நான் கண்ட சிறப்பம்சம் யார் அழைப்புக் கொடுத்தாலும் அதை மதித்து ஏற்றுக்கொள்ளும் பண்பாகும். தேக சுகம் குறைவாக இருந்தாலும் கூட அழைப்புக்குக் கௌரவம் கொடுத்துச் செல்வதை நான் பலமுறை கண்டிருக்கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. க. சிவாஜி**
அதிபர்
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல தலைவன் நல்ல மனைவி நல்ல பிள்ளை

# தெய்வீகம்

பளை, தென்மராட்சி, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், பிரதேச செயலர் பிரிவு மக்கள் இடம்பெயர்ந்தும் இறந்தும், காயப்பட்டும் இருப்பிட வசதிகள் தேடியும் பல்வேறு உதவிகள் கேட்கும் இத்தருணத்தில் எனக்கு உதவியாகவும் வழிகாட்டியாக வும் இருக்கவேண்டிய ஒரு நல்ல மனிதர் 17.06.2000 அன்று மரணித்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

ஒக்டோபர் 1995இல் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்த வலிகாமம் மக்கள் மீண்டும் ஏப்ரல் 1996இல் குடியேறியபொழுது "தந்தை செல்லாபுரம்" பிரிவு மக்கள் குடியேறு வதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதன்காரணமாக யூன் 1996இல் என்னை தற்காலிகமாக உடுவில் மத்தி வடக்குப் பிரிவில் கடமையாற்ற அனுப்பினார்கள்.

அக்காலத்தில் மீளக்குடியமர்தல் பணம் பெறுவதற்கு வங்கிக் கணக்கு இலக்கம் கொடுக்கவேண்டியிருந்தது. பலரிடம் வங்கிக் கணக்கு இருக்கவில்லை. கிராமிய வங்கி உத்தியோகத்தர்களிடம் கேட்டபொழுது தங்களிடம் போதியளவு சேமிப்புக்கணக்கு புத்தகம் இல்லையென்று சொன்னார்கள். இதனால் எனது பிரிவைச் சேர்ந்த வரும் முகாமையாளர் மக்கள் வங்கி பல்கலைக்கழகக் கிளையைச் சேர்ந்தவருமாகிய திரு. ஆ. சிற்சபேசனிடம் தொடர்பு கொண்டேன். அன்னார் உடனடியாக ஒரு நடமாடும் சேவையை ஏற்படுத்தி பலருக்கு வங்கியில் கணக்கை ஆரம்பித்துக் கொடுத்தார். இதனால் மிகவும் விரைவாக மீளக்குடியமர்தல் பணத்தைப் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருந்தது.

அமரர் தனது 55ஆம் வயதில் இளைப்பாறுகின்றார் என அறிந்து அதற்குரிய காரணத்தைக் கேட்டேன். அதற்கு அவர் தனது உடல்நிலையுடன் கடமையைத் திருப்தியாகச் செய்ய முடியாது என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சிற்சபேசன் எனது அலுவலகம் வரும்பொழுது தான் வங்கி முகாமையாளர் என்ற வகையில் அணுகாது தானும் ஒரு பொதுமகன் என்ற வகையில் மிகவும் பணிவாக வரும் காட்சியை என்னால் இலகுவில் மறந்துவிடமுடியாது.

இவருடைய இரு புதல்வர்களும் உயர்கல்விக்குத் தெரிவு செய்யப்பட்ட மிகவும் நல்ல பண்புகளைக் கொண்டவர்கள். அதுமட்டுமல்லாது மனைவி மிகவும் தாராள மனமும் மற்றவர்களை அன்புடன் வரவேற்கும் பண்புகளைக் கொண்டவர். மொத்தத்தில் இவருடைய குடும்பம் நல்ல தலைமையைக் கொண்டது என்று சொன்னால் மிகையாகாது.

எனது பிரிவில் மூன்று சனசமூகநிலையங்களில் ஒன்றான உடுவில் மத்தி சனசமூக நிலையத்தை 1997இல் ஆரம்பித்தோம். அதற்கு ஒரு நல்ல தலைமையை தேடினோம் அதன்படி அமரர் இளைப்பாறியபொழுது உடல் நிலையையும் பாராது தலைவர் பதவியை எடுத்தார். வீடு வீடாகச் சென்று அங்கத்தவர்களைச் சேர்த்தார். புத்தகங்களைச் சேர்த்து தானும் தன்னிடமிருந்த புத்தகங்களையும் சனசமூக நிலையத்திற்குக் கொடுத்து இதன் வளர்ச்சியை கண்டு பூரித்தார்.

மொத்தத்தில் ஒரு நல்ல குடும்பத் தலைவனாக, வங்கி முகாமையாளராக, கிராமத்தலைவனாக கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் திகழ்ந்தார் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அன்னாருடைய ஆத்மா சாந்தியடையவும் அவருடைய குடும்பத்திற்கு ஆறுதல் கூறி இறைவனைப் பிரார்த்தித்து அவரைப் போல நாமும் வாழ்வோம் எனக் கூறி முடிக்கின்றேன்.

**செ. றொ. யேசுபாலன்**

கிராம உத்தியோகத்தர்
உடுவில் மத்தி வடக்கு யா/185



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பூத்த உத்தம தலைவன்

இரண்டாயிரமாம் ஆண்டும் பிறந்தது. உடுவில் மத்திய சனசமூக நிலையமும் ஒரு நல்ல தலைவனைப் பெற்றெடுத்து மகிழ்வுற்றது. அவர்தான் 17.06.2000ஆம் ஆண்டில் அமரத்துவம் அடைந்துவிட்ட ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ஆ. சிற்சபேசன் ஐயா அவர்கள். இவர் வலிதெற்கு சனசமூக நிலையங்கள் சமாசத்தின் நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்துக் கொண்டிருந்தவர்.

எமது நிலையத்தின் வளர்ச்சி கருதி தனது உடல்நலனையும் பொருட்படுத்தாது ஊக்கமுடன் செயற்பட்டு பல நூல்களைச் சேகரித் தது மட்டுமன்றி, மழைச்சதுக்கலில் கூட கால்நடையாக வீடு வீடாகச் சென்று அங்கத்தவர்களைச் சேர்ப்பதிலும், நிதி சேகரிப் பதிலும் ஈடுபட்டமையும் நெஞ்சை விட்டகலா நினைவாக உள்ளது.

சேவை, அன்பு, பக்தி, நேர்மை, உறுதி குன்றாமை, சகலரையும் மதித்து நடக்கும் பண்பு, அயலவர்களுக்கு மட்டுமன்றி தன்னைச் சந்திக்கும் எவருக்கும் நல் வளர்ச்சிக்கான ஆலோசனை களை இருதய சுத்தியோடு வழங்கும் சிறப்பியல்பு கொண்ட ஒருவராகத் திகழ்ந்தவர் இன்று நம் புறக்காட்சிக்கு இல்லையே அன்றி அகக்காட்சியில் என்றும் இருக்கிறார்.

இறைவனின் பாத கமலத்தில் சரணடைந்துவிட்ட அன்னார் புகழோடு பிறந்து புகழ்பட வாழ்ந்து எமைவிட்டு பிரிந்தபின்பும் போற்றப்படும் உத்தமோத்தமர். அவரின் இறுதிச் சடங்கு நிகழ்வுகள் பி.பகல் 2.30ஐக் கடந்தபோதும் அஞ்சலி உரை நிகழ்வு நடக்கும்போது மக்கள் அமைதி குலையாமல் இருந்து செவிமடுத்ததைப் பார்த்தபோது அன்னார் எல்லோர் நெஞ்சங்களி லும் நிறைவுபெற்ற ஒருவர் என்றே எண்ணத்தோன்றியது. எமது சனசமூக நிலையம் இனி ஒரு நல்ல தலைவனைப் பெறும் நாள் எந்நாளோ!

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது நிலைய சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு நாமும் ஆத்ம சாந்தியின் சிறப்பிற்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக.

உடுவில் மத்திய சனசமூக நிலைய
**நிர்வாகிகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் புகழ, நன்மை பெருக, நன்மை செய்து, புகழ் நிறுவி வாழ்பவர் சிலரே. அன்னார் செய்த நற்செயல்கள் ஞாலம் என்றும் மறவாது, நாளும் நினைப்பர் உயிர் உள்ளளவும்.

நல்லவனையும் வல்லவரையும் ஆன்றோரையும் சான்றோரையும் படிமிசை நீடு வாழ விடாது தன்னோடு அணைக்க அழைக்கிறான் ஈசன்.

இனிய தோற்றம், பரந்த உள்ளம், பிறர்க்கு உதவி செய்யும் கருணைக் கண்கள், செழிப்பான முகம். இவர் தான் அமரர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன் அவர்கள்.

அன்னாருடன் பழகும் வாய்ப்பு எமக்கு 1985ஆம் ஆண்டு கிடைத்தது. அன்னாருடைய பெரும் குணத்தை என்றும் உலகம் மறவாது.

**“காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்,**

**ஞாலத்தின் மாணப் பெரிது”** என்பது திருவள்ளுவர் கூற்று. அதற்கு இலக்கணமாக வாழ்ந்தவரே இப்பெரியார்.

அன்னாரின் மறைவு இவரது குடும்பத்தார்க்கு மட்டுமல்ல, அவருடன் நெருங்கிப் பழகிய அனைவருக்கும் பெரிய வேதனை கொடுத்துள்ளது.

அவர் காலநேரமறிந்து பிறர்க்கு உதவி செய்யும் உத்தமன். காலமெல்லாம் தொண்டு செய்வதே நோக்கம் கொண்ட பெரியார். இவர் போன்ற உத்தமரைக் காண்பதே அரிது.

காலன் காலமறிந்து தேடி நாடி வந்து அழைத்துச் செல்வதே இயற்கை.

இவர் பிரிவு குறித்து கலங்கி கண்ணீர் வடித்து நிற்கும் இவரது குடும்பத்தார்க்கு எமது இரங்கல் உரையைச் சமர்ப்பிக்கின்றோம்.

130, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**குகன் ஸ்ரோர்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

ஆழ்வாப்பிள்ளை + பார்வதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிவதாசன் | திருச்சிற்றம்பலம் | சரோஜினிதேவி | **சிறீசபேசன்** | சிவசிதம்பரம் | சரஸ்வதிதேவி |
| + | + | + | + | + | + |
| இந்திரேஸ்வரி | சரஸ்வதி | கணபதிப்பிள்ளை | நவேந்திரராணி | ஸ்ரீரதி | மகேந்திரன் |
| அருள்ஜோதி | முகுந்தன் | ஜெயந்தி | செந்தூரன் | கணேஸ் | |
| ஆனந்தகுமார் | கயல்விழி | ஜெயக்குமார் | ஜங்கரன் | ஜனனி | |
| அருட்செல்வன் | ராசன் | ஜெயரூபன் | | | |
| அமலதாரா | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

மயில்வாகனம் + கனகம்மா

| | | | |
|---|---|---|---|
| நாகபூசணி | நவேந்திரராணி | சிவலிங்கம் | நவபுஸ்பம் |
| + | + | + | + |
| கந்தையா | ஸ்ரீசபேசன் | ஜெயலட்சுமி | கதிர்காமநாதன் |
| சிவானி | செந்தூரன்<br>ஐங்கரன் | நிஷாந்தி | கஜமுகதாஸ்<br>காந்தரூபன்<br>பகீரதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது குடும்பத் தலைவரான
அன்புத் தந்தையாரின்
இறுதிக் கிரிகைகளின்போது சமூகமளித்து
ஆறுதல் கூறியோருக்கும்
அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும்
கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் வழங்கியவர்கள்,
மலர் வளையம் வைத்தவர்கள் அனைவருக்கும்,
சபிண்டீகரண நிகழ்ச்சியில் கலந்து கொண்டோருக்கும்
வேறு பல வழிகளில் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும்
எமது மனமுவந்த
நன்றிகள்.
நன்றி

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்

துயா அச்சகம் கொம்பியூட்டர் பிறிண்ட் & றோணியோ
138, நாவலர் வீதி, (நாவலர் பாடசாலை முன்பாக) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org